

# மாவீரர்நாள் பேச்சுப்போட்டி 2023

**பிரிவு - 10 வயது (வகுப்பு 5)**

## தியாகி திலீபன்

தற்கொடை என்னும் புனிதமான சொல்லின் முழுமையான உள்ளடக்கத்தை எமக்கு மட்டுமல்ல, உலகத்திற்கே புரிய வைத்தவன் திலீபன்.

அன்று, ஈழத்திலுள்ள ஊரெழு என்ற சிற்றூரில் பார்த்திபன் என்ற பெயருடன் ஓடி விளையாடித்திரிந்த அந்தச் சிறுவன்,
இன்று, திலீபன் என்ற தற்கொடையாளியாய், ஈழ மக்களின் மனங்களில் நீங்காத இடம்பெற்று வாழ்கிறான்.

பல்கலைக்கழகப் படிப்பிற்குத் தகுதியடைந்தபோதும் அதனைப் பக்குவமாய் ஒதுக்கிவிட்டுப் புரட்சிக்கு புறப்பட்டது அந்தப் புறா. அவனது விடுதலை வேட்கையினையும் ஆழமான அறிவினையும் கண்டு தமிழீழமே வியந்தது. பல்லாயிரக்கணக்கான மக்களின் அன்பிற்கு உரியவன் அவன்.

ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து, அவன் யாழ் நல்லைக் கந்தன் முன்றலில் நீராகாரம் இன்றி உண்ணா நோன்பைத் தொடங்கினான்.

இந்திய அரசு அவனது கோரிக்கைகளை ஏற்று அவனை உயிர்பிழைக்க வைக்கும் என்றே தமிழீழ மக்கள் நம்பியிருந்தனர்.

ஆனால், எமது மக்களின் நம்பிக்கை பொய்த்துப் போனது. ஆம்! 12 நாட்களின் பின்னர் திலீபன் எம்மை எல்லாம் விட்டுவிட்டு உயிர் துறந்தான்.

உலகிலேயே நீர்கூட இன்றி உண்ணாவிரதம் இருந்து உயிர்விட்ட முதற் போராளியாய் வரலாறு இவனைப் பதிந்துகொண்டது.

ஒரு நிமிடம் கூட ஓயாமல் எமது விடுதலைக்காக உழைத்த தியாகி திலீபன் எமது மனங்களில் அணையாச் சுடராகி ஒளிர்கிறான்.

வாழ்க திலீபனின் புகழ்! வெல்க தமிழீழம்!

நன்றி! வணக்கம்.